சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – பி.இ./பி.டெக்./பி.ஆர்க். பொறியியல் பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கை – பிறமாநில மாணவர்களின் மேல்நிலைக்கல்வி மேம்பாட்டு தேர்வு மதிப்பெண்கள் தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு பரிசீலிப்பது – தொடர்பாக – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.143 நாள்: 6.5.2008.

சித்திரை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.184, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 9.6.2005.
2. நீதிப்பேராணை எண்.18801/2005 மற்றும் சில வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றத்தின் 27.6.2005 நாளிட்ட தீர்ப்பு.
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.49930/ECA1/மேம்பாட்டுத் தேர்வு மதிப்பெண்கள்/2007–1, நாள் 31.12.2007.
4. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.101933/ஜே3/2007, நாள் 9.1.2008.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பிறவற்றுடன் 2005–2006–ஆம் கல்வியாண்டில் மேம்பாட்டுத்தேர்வு எழுதிய மாணவர்களின் மதிப்பெண்கள் தொழிற்கல்வி மாணவர் சேர்க்கைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் 2005–2006–ம் கல்வியாண்டில் தொழிற்கல்வியில் சேர விரும்பும் மாணவர்களுக்கு அவர்கள் தேர்வில் முதல் முயற்சியில் பெற்ற மதிப்பெண்களையே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையினை எதிர்த்து செல்வி பிரியதர்சினி மற்றும் சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு நீதிப் பேராணை எண்.18801/2005 மற்றும் சில வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் 27.6.2005 அன்று வழங்கிய தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது:-

> '"In so far as the abolition of improvement examination is concerned, we hold that this is a policy decision and ordinarily this court does not interfere with policy decisions (unless they violate some statute or constitutional provision or is shockingly artbitrary in the Wednesbury sense). We do not see any violation of any statute or constitutional provision by canceling the improvement test, nor do we find it shockingly arbitrary in the wednesbury sense. This was only a concession granted to the students who wanted to improve their marks in the plus two qualifying examination at their risk. However, since in this year the improvement examination has already been held and the common entrance test has also been held, it would not be proper to cancel the improvement examination for this year, but for the academic year 2006-2007 and onwards the improvement test need not be held by the authorities, unless they choose to restore it."

2. அதனடிப்படையில் 2006–2007 மற்றும் 2007–2008–ஆம் கல்வியாண்டுகளில் மேம்பாட்டுத் தேர்வு நடத்துவது நிறுத்தப்பட்டதுடன், பிற மாநில மாணவர்களின் மேம்பாட்டுத் தேர்வு மதிப்பெண்களும் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும், ஆனால் 2006–2007–ம் கல்வியாண்டுக்கு முந்தைய ஆண்டுகளில் மேம்பாட்டுத் தேர்வு எழுதிய மாணவர்கள் மாணவர் சேர்க்கைக்கு கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர் என்றும், மேலும் சில தனியார் பொறியியல் கல்லூரிகள் மேம்பாட்டுத் தேர்வு எழுதிய பிற மாநில மாணவர்கள் (குறிப்பாக கேரளா), அவர்கள் மேம்பாட்டுத் தேர்வில்தான் தேவையான பாடங்களில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களான 60% பெற்றிருக்கிறார்கள் என்பதால் அந்த மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களை நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் இந்த கல்வியாண்டில் (2007–2008) சேர்த்துள்ளார்கள் என்றும் முதலாம் ஆண்டு பி.இ./பி.டெக். சேர்க்கை பெற்ற மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களை சரிபார்க்கும்போது மேற்கண்டவாறு சில பொறியியல் கல்லூரிகள் மாணவர்களை சேர்த்துள்ளது கண்டறியப்பட்டு, இது தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கும் 2005–2006–ம் கல்வியாண்டிற்கு பிறகு, மேம்பாட்டுத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு தகுதியில்லாதவர்கள் என்பதால் 2007–2008–ம் கல்வியாண்டு மேம்பாட்டுத் தேர்வு அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களுடைய சேர்க்கைக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்றும் 2007–2008–ம் கல்வியாண்டில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு ஒப்புதல் அளிக்கும்போது மேம்பாட்டுத் தேர்வின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கைக்கு ஒப்புதல் அளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் சில சுயநிதி பொறியியல் கல்லூரிகள் தங்களுடைய நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் கேரளாவைச் சேர்ந்த சுமார் 124 மாணவர்களை சேர்த்துள்ளனர் என்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.184, உயர்கல்வித் துறை, நாள் 9.6.2005–ன்படி மேனிலைக் கல்வி (+2) மேம்பாட்டுத் தேர்வுத் திட்டம் தமிழ்நாட்டில் 2006–2007 ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவிட்டதால், தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு பிற மாநில மாணவர்களின் மேம்பாட்டுத் தேர்வு மதிப்பெண்களை எடுத்துக் கொள்ள பரிசீலிக்க வேண்டாம் என்று தெரிவித்து, இது குறித்து அரசாணை வெளியிடுமாறும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

4. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து மேனிலைக் கல்வி (+2) மேம்பாட்டுத் தேர்வுத் திட்டம் தமிழ்நாட்டில் 2006–2007 ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவிட்டநிலையில், தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு 2005–2006க்கு பிறகு மேம்பாட்டு தேர்வுகளை எழுதிய பிற மாநில மாணவர்களின் மேம்பாட்டுத்தேர்வு மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது என ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.

துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி.

அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)

நகல்

உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.